# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

**අති විශෙෂ**

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 2032/6 - 2017 අගෝස්තු මස 14 වැනි සඳුදා - 2017.08.14

2032/6 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 14 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

குறிப்பிலக்கம்: CHI/LND.1/AC/5/64.
4/3/15/2014/VE/270.

ஒரு பொதுத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

வடமேல் மாகாணத்தில் புத்தளம் மாவட்டத்தில் சிலாபம் பிரதேச செயலகப்பிரிவில் முன்னேஸ்வரம் பத்துவ சிறு பிரிவில் இலக்கம் 567 தித்தகடே கிராமத்தில் அமைந்திருக்கும் நில அளவையாளர் நாயகத்தினால் அளந்து தயாரிக்கப்பட்ட ஆரம்ப வரைபட இலக்கம் 5325 உம் 2017.03.31 ஆந் திகதியுடையதும் துண்டு இலக்கம் 01 எனவும் காட்டப்பட்டுள்ள 1.1114 ஹெக்டயார் விஸ்தீரணம் கொண்ட காணித்துண்டு.

1. **துண்டு இலக்கம் 01**

காணியின் பெயர்: தேவாலவத்த; விபரம்: நிரந்தரக் கட்டிடங்கள் 31 மற்றும் 10-15 வயதுடைய தென்னை மரங்களும் உள்ளன; உரிமையாளர்: தேடிக்கொள்ள முடியாது.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகார மளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 01 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு, சிலாபம் பிரதேச செயலகத்தில் என்னை சந்திக்க வேண்டும்.

மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தை களின் தன்மையையும் குறித்த காணித்துண்டை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கை களின் விபரங்களையும் நட்டஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2017 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 15 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

டீ. எம். ஏ. கே. திஸாநாயக்க,
பிரதேச செயலாளர்,
சிலாபம்.

பிரதேச செயலகம்,
சிலாபம்,
2017, ஓகத்து 09.

8 - 978

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

இல.: RAT/LAN/11/F1/1.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2015 ஆம் ஆண்டு யூன் மாதம் 10 ஆந் திகதிய 1918/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் பகுதி III இல் 1A பக்கத்தில் பிரசுரிக்கப்பட்ட சிரேஷ்ட நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2014.10.28 ஆந் திகதிய 521006/03/03 ஆம் இலக்க கடத்திரல் வரைபடத்தில் துண்டு இல. 270 முதல் 307 வரை காட்டப்பட்டுள்ள 19 காணித்துண்டுகளில் துண்டு இல. 271, 273, 274, 276, 279, 281, 282, 285, 286, 288, 290, 293, 294, 296, 299, 300. 303, 305 மற்றும் 306 ஆகிய காணித்துண்டுகளை அரசுக்கு உரித்தாக்கப்படாத காணித்துண்டுகளாக அவ் அறிவித்தல் திருத்தப்படுகின்றது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

அதில் எடுத்துக்கொள்ளப்படுகின்ற காணியின் விஸ்தீரணமானது 0.3310 ஹெக்டயார் என குறிப் பிடப்பட்டிருப்பினும், அது 0.0198 ஹெக்டயார் என திருத்தப்படுகின்றது என்பதை இத்தால் அறியத்தரு கின்றேன்.

டி. ஏ. எச். பியதிலக்க,
பிரதேச செயலாளர்,
இரத்மலானை.

பிரதேச செயலகம்,
இரத்மலானை,
2017, ஓகத்து 09.

8 - 979

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.